**தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியம் - 2022**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதியத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஒன்றாக காணப்பட்டதுடன், முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதலும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம் இடம் பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- நிதியத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள்

போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை மாற்றியமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

  வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள்

| உரிய நியமத்தின் தொடர்புடனான இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 48 இற்கு இணங்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகளை ஒன்றிற்கு ஒன்றை பிரதியீடு செய்யக்கூடாத போதும், 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த திறைசேரி உண்டியல் ரூபா 27,425,701 இனை மற்றும் எதிர்வரும் ஆண்டிற்காக திறைசேரி உண்டியல் வட்டி வருமான பெறுவனவு ரூபா 454,444 தொகையினை ஒன்றுடன் ஒன்றை பிரதியீடு செய்து தேறிய பெறுமதியாகிய ரூபா. 26,971,257 நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரியாக குறிப்பிடுகிறேன். | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம் 76 பிரகாரம், அறிக்கையிடும் திகதியின் பின்னர் 12 மாதங்களினுள் மாற்றப்படும் என எதிர்பார்க்கப்படாத சொத்துக்கள், நடைமுறையல்லாத சொத்துக்களாக வகைப்படுத்தப்பட வேண்டிய போதும், 2024 ஆண்டில் கொடுப்பனவு ஆரம்பிக்கப்பட்டு 2026 ஆண்டில் கொடுப்பனவுகளை பூர்த்தி செய்ய வேண்டிய, மீளாய்வாண்டில் திரையரங்கொன்றிற்கு வழங்கிய ரூபா 300,000 ஆன கடன்படுனர் மீதி நடைமுறை சொத்துக்களின் கீழ் வகைப்படுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது சரியாக குறிப்பிடுகிறேன். | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பந்தி இலக்கம் 22 மற்றும் 27 (ஆ) பிரகாரம் காசுப்பாய்ச்சல கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் செயற்படு மூலதன விடயங்களின் வித்தியாசத்தின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய கடன்படுனர் வித்தியாசம் ரூபா 873,425 தொகை மற்றும் கிடைக்க வேண்டிய காசு வித்தியாசம் ரூபா 1,972,244 தொகை நிதி செயற்பாடுகளின் கீழ் வகைப்படுத்திக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு முதல் செயற்படு மூலதன விடயங்களின் வித்தியாசத்தின் கீழ் காண்பிக்கப்படும். | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் பந்தி இலக்கம் 92 பிரகாரம், தற்காலிகமாக செயலிழந்துள்ள அல்லது முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட போதும் தொடர்ந்தும் பயன்படுத்தப்படும் அல்லது செயற்படு பயன்பாட்டிலிருந்து ஒதுக்கியுள்ள மற்றும் வெளியேற்றுவதற்காக வைத்துள்ளதாக வகைப்படுத்தப்பட்ட ஆதன, பொறிகள் மற்றும் உபகரணங்களின் எஞ்சிய பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதும் 2022 ஆண்டு வரை முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட கிரயம் ரூபா 567,732 ஆன ஓவர்ஹெட் புரஜெக்டர் மற்றும் மல்டிமீடிய புரஜெக்டர் தொடர்பாக அவ்வாறு வெளிப்படுத்தி இருக்காததுடன் அச் சொத்துக்களின் நிலைத்திருத்தலையும் உறுதி செய்யப்படவில்லை. | 2023 ஆண்டு நிலையான சொத்துக் கணிப்பீட்டின் போது தகவல்களை இனங்காண நடவடிக்கை எடுக்கிறேன். ஓவர்ஹெட் புரஜெக்டர் மற்றும் மல்டிமீடிய இயந்திரம் செயலிழந்ததனால் தற்போது கணக்கு புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. | நியமத்தின் ஏற்பாடுகளிற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 ஆண்டின் ஆரம்ப மீதிகளுடன் செம்மையாக்க வேண்டிய 2021 திசெம்பர் 09 திகதி ரூபா 3,200,000 இற்கு மீள்மதிப்பிடப்பட்ட GB – 1371 இலக்க Mitsubishi L 300 வான் வண்டியின் பெறுமதி 2022 ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள காரணத்தால் மோடார் வண்டிக் கணக்கு மற்றும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கக் கணக்கில மீளாய்வாண்டில் ஆரம்ப மீதி ரூபா 3,200,000 ஆகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்ததுடன் அந்த வான் வண்டிக்காக 2021 ஆண்டிற்குரியதாக ரூபா 50,441 ஆன பெறுமானத் தேய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. 2022 சொத்துக் மீள்மதிப்பீடு செய்து ஆரம்ப மீதியுடள் செம்மையாக்காத போதும் ஆண்டிறுதியில் கூட்டி குறிப்பிடப்பட்டுள்ளது.. 2021 ஆண்டின் தேறிய பெறுமானமாக காண்பிக்கப்பட்டுள்ளது 1/= எனவாகும். 2022 ஆண்டில் மீண்டும் மீள்மதிப்பீட்டு பெறுமதியை கூட்டி பெறுமானத் தேய்விடப்பட்டள்ளது. | சரியாக பெறுமானத் தேய்வு செம்மையாக்கப் பட வேண்டும். |
| (ஆ) வேகந்த வளவ்வ மற்றும் நிசலகிரி திரைப்படம் காட்சிப்படுத்தல் வருமானத்திலிருந்து நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய கட்டணம் ரூபா 3,532,156 தொகையின நிலுவை காலம் 2022 திசெம்பர் 31 திகதியன்று 05 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதும், அத் தொகையை அறவிட அல்லது அதற்காக ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | திரையரங்கு நவீன தொழிநுட்பத்துடன் ஒளிவீச்சு நடவடிக்கை செய்யயப்படுவதால் 35mm திரைப்பட காட்சிப்படுத்தல் சந்தர்ப்பம் இழக்கப்பட்டுள்ளது. இந்த திரைப்படம் 35mm திரைப்பட நாடா ஆகையால் மீண்டும் காட்சிப்படுத்தி கடனை அறவிடும் இயலுமை இழக்கப்பட்டுள்ளது. இத் தொகை அமையப் பெற்றுள்ளது காட்சிப்படுத்தல் வருமானம் அறவிடப்பட்டதன் பின்னராகும் என அறிவிக்கிறேன். | நிதியத்திற்கு கிடைக்க வேண்டிய தொகையை அல்லது அதற்காக ஒதுக்கீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக்கூற்று பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கை பிரகாரம் பெறுமதி ரூபா | வித்தியாசம் ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| திரைப்பட தயாரிப்பு செலவு | 1,360,404 | 1,457,772 | 97,368 | அட்டவணை தயாரிக்கும் போது இடம்பெற்ற தவறொன்றாகும். | அட்டவணையை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தின் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரைப்பட தயாரிப்பு கடன், திரையரங்கு கடன் மற்றும் கொவிட் -19 திரையரங்கு கடன் ரூபா 72,236,299 தொகை மற்றும் வேகந்த வலவ்வ மற்றும் நிசலகிரி திரைப்படம் காட்சிப்படுத்தும் வருமானத்தில் இருந்து பெற வேண்டிய ரூபா 3,532,156 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 75,768,455 மீதியில் 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 74,786,010 ஆனதுடன் கைத்தொழில் சரிவடைதல், முகாமைத்துவம் கடன்களை அறவிடுவதற்கு போதிய நடவடிக்கைகள் எடுக்காமை போன்ற நிலைமையின் மீது அத் தொகையை அறவிட முடியாமலிருந்தது. பெற வேண்டிய கடன் மீதியான ரூபா 72,236,299 இன் 92 சதவீதமான ரூபா 67,222,372 இனை ஐயக்கடன் ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது | அவதானிப்பு சரியானது. | நிலுவை பழமையான கடன் மீதியை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) 2020 ஜுலை 21 திகதிய இலக்கம் 53 - 01 கொண்ட கட்டுப்பாட்டு சபை தீர்மானத்தின் பிரகாரம் கொவிட் - 19 தொற்று நிலைமை காரணமாக 02 திரையரங்குகளிற்கு ரூபா 300,000 வீதம் வழங்கியிருந்த கடனை, உடன்படிக்கை பிரகாரம் அறவிட நடடிவ்ககை எடுக்காத காரணத்தால் 2024 மார்ச் 18 திகதியன்று மேலும் 02 திரையரங்குகளிலிருந்து அறவிட வேண்டிய கடன் தொகை ரூபா 249,087 தொகை அறவிடப்படாது காணப்பட்டதுடன் முடிவடைந்திருந்த கடன் உடன்படிக்கைகளின் காலத்தை நீடிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இரவுநேர திரையரங்கு – கட்டுநாயக திரையரங்கிலிருந்து 2023.12.31 திகதி வரை அறவிட வேண்டிய ரூபா 131,577.50 ஆன தொகையிலிருந்து ரூபா 64,785.75 தொகையை 2024 பெப்ரவரி மாதம் செலுத்தப்பட்டுள்ளது.<br>நஹமிஸ் - சுன்னாகம் திரையரங்கிலிருந்து பணம் செலுத்துமாறு எழுத்து மூலம் மற்றும் தொலைபேசி மூலம் அறிவுறுத்தப்பட்டது. | உடன்படிக்கை பிரகாரம் கடனை அறவிடவும் முடிவடைந்துள்ள கடன் உடன்படிக்கைகளின் காலத்தை நீடிக்கவும் நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (இ) 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை தேசிய திரைப்பட கூட்டுத்தாபனத்திலிருந்து, நிதியத்திற்கு பெற வேண்டிய வாடகை பங்கழிப்பு ரூபா 29,140,411 தொகையிலிருந்து 2024 மார்ச் அளவில் ரூபா 24,140,411 தொகை மேலும் நிலுவையாக காணப்பட்டது. | 2023 ஆண்டின் போது ரூபா 05 மில்லியன் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் எதிர்காலத்தில் பகுதியாக பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். | கூட்டுத்தாபனம் இடமிருந்து பெற வேண்டிய வாடகை தொகை அறவிட செயற்பட வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1996 ஒக்தோபர் 24 ஆந் திகதிய 946/9 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் திருத்திய 1971 இன் 47 இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 61 மற்றும் 05 பிரிவுகளின் கீழான கட்டளைகள். | | | |
| i. கட்டளை இலக்கம் 4 (அ) | திரைப்பட கைத்தொழிலிற்காக தேவையான உபகரணங்கள் மற்றும் மூலப் பொருட்களை வழங்குவதற்கு மற்றும் உள்நாட்டு ரீதியாக திரைப்படங்களை தயாரிக்க தோல் கொடுத்தல் மற்றும் உதவி ஒத்தாசை வழங்கவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபை நியமனம் தாமதித்த காரணத்தால் தங்களால் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களிற்காக ஆக்கபூர்வமான செயன்முறையொன்று இடம்பெறவில்லை. எதிர்காலத்தில் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களின் பக்கம் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கிறேன். | கட்டுப்பாட்டு சபை கூட்டங்களை உரியவாறு நடாத்தி கட்டளைகளை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| ii. கட்டளை இலக்கம் 4 (ஆ) | பார்வையாளர்களின் மற்றும் அரங்க ஊழியர்களில் வசதிகள் மற்றும் பிரவேசத்திற்காக தேவையான அளவு வசதிகளை திரைப்பட அரங்கு வழங்குவதாக உறுதி செய்திருக்கவில்லை. | மேற்படி | கட்டுப்பாட்டு சபை கூட்டங்களை உரியவாறு நடாத்தி கட்டளைகளை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| iii. கட்டளை இலக்கம் 4 (இ) | திரைப்பட கைத்தொழின் ஏனைய பிரிவுகளில் மேம்படுத்தலை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்படி | கட்டுப்பாட்டு சபை கூட்டங்களை உரியவாறு நடாத்தி திரைப்பட கைத்தொழில் மேம்பாட்டை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| iv. பிரிவு 2(4)(1)(உ) | திரைப்படக்களின் உயர் தரத்தினை உறுதிப்படுத்துவற்காக மற்றும் திரைப்படக்கள் தயாரிப்பதற்காக மற்றும் காட்சிப்படுத்துவதற்கு தேவையான உபகரணங்களை வழங்க நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | மேற்படி | கட்டளை பிரகாரம் திரைப்படக்களை தயாரிப்பதற்கு மற்றும் காட்சிப்படுத்த தேவையான உபகரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| v. பிரிவு 2(4)(1)(எ) | தரமான கலைசார் திரைப்படக்கள் முழுமையாக தயாரிப்பதற்காக திரைக்கதை வசன மதிப்பீட்டுக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த திறைக்கதைகள் அல்லது அவ்வாறான திரைப்படங்களை தயாரிக்கும் கருமங்களுக்காக பெற்றுக்கொள்ளக்கூடியதாகவுள்ள மூலவலத்தின் மூலம் விசேடத்துவ உபகரணங்கள் குத்தகைக்கு பெறுவதற்காக இயக்குனர்களுக்கு கடன் வழங்குவதன் மூலம் திரைப்பட தயாரிப்பினை மேம்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | மேற்படி | கட்டளைகளை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| vi. பிரிவு 2(4)(1)(ஏ) | 05 வருடங்கள் அல்லது அதற்கு அதிகமான காலம் தொடர்ச்சியாக உள்நாட்டு திரைப்படக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மற்றும் பத்து திரைப்படங்களுக்கு குறையாத எண்ணிக்கையில் அந் நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ள தொழில்சார் தொழில்நுட்ப கலைஞர்களுக்கு தமது திறனை அதிகரித்துக் கொள்வதற்காக மற்றும் முன்னேற்றிக் கொள்வதற்காக கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேற்படி | கட்டளைகளை நடைமுறைப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 1978 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 842 கொண்ட திறைசேரி சுற்றறிக்கை | நிதியத்தினால் நிலையான சொத்து பதிவேடொன்றை பேணிச் சென்றிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. | சுற்றறிக்கை பிரகாரம் நிலையான சொத்து பதிவேடொன்றை பேணிக் கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,976,126 ஆன மிகை ஒன்றாகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,000,099 தொகை ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 8,976,027 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் நிதியத்தின் நிறுவன மற்றும் நிர்வாக செலவினம் ரூபா 1,283,722 இனால் அதிகரித்திருந்த போதும் அதற்கு ஒப்பாக ரூபா 10,259,749 இனால் நிதியத்தின் வருமானம் அதிகரித்தமை இந்த வழர்ச்சிற்கு முக்கிய காரணமாக இருந்தது.

## 3. செய்ற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய திரைப்பட அபிவிருத்தி நிதிய கட்டளைகளின் கீழான பணிகளை நடைமுறைப்படுத்தும் போது அந்த ஒவ்வொறு பணிகளிற்கும் உரியதாக வெவ்வேறாக தயாரிக்கப்பட்ட விதிக் கோவையொன்று அல்லது நடைமுறைகள் இருக்க வேண்டிய போதும் நிதியத்தினால் அவ்வாறான விதிக் கோவையொன்றை அல்லது நடைமுறைகளை தயாரித்திருக்காததால் நிதியத்தினால் நடைமுறைப்படுத்திய பணிகள் தொடர்பாக உரிய மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியவில்லை. | திரைப்பட அபிவிருத்தி நிதிய ஆரம்பத்தில் வர்த்தமானியில் குறிப்பிடப்படும் விதிக் கோவையொன்று இருந்த போதும் ஒவ்வொறு சந்தர்ப்பத்திலும் நியமிக்கப்படும் கட்டுப்பாட்டு சபை உறுப்பினர்களின் ஆலோசனை பிரகாரம் செயற்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் புதிய விதிகளின் பிரகாரம் செயற்பட வர்த்தமானியை திருத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தினால் செயற்படுத்தும் பணிகளிற்கு உரியதாக விதிக் கோவையொன்றை அல்லது நடைமுறைகளை தயாரிக்க அல்லது வர்த்தமானியை திருத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் மீளாய்வாண்டு நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 12,832,242 ஆக இருக்கும் போது நிதியத்தின் முக்கிய வருமான வழியான கட்டளை இலக்கம் 02 பிரகாரம் திரைப்பட கைத்தொழிலினூடாக ஈட்டியிருந்த வருமானம் ரூபா 1,972,244 அளவான குறைந்த மட்டத்தில நிலவியது. திரைப்பட கைத்தொழிலின் சரிவடைவும், அக் கைத்தொழிலை கட்டியெழுப்பு நடவடிக்கை எடுக்காது நிதி முதலீடு செய்வதனை மாத்திரம் செய்திருப்பதும் இந் நிலைமைக்கு காரணமாக இருந்தது. | அமைச்சு மாற்றமடைந்தன் மீது கட்டுப்பாட்டு சபையை நியமித்தல் தாமதமானது. அதன் காரணமாக கைத்தொழிலை கட்டியெழுப்ப தீர்மானமெடுத்தல் மற்றும் செயற்படுத்துதல் பிரச்சினையாகவுள்ளது. தற்போது புதிய சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானி திருத்தப்படவுள்ளது. புதிய வர்த்தமானியின் பிரகாரம் கைத்தொழிலை கட்டியெழுப்ப நிதி முதலீடு செய்யும் வரை | புதிய சட்டத்தின் பிரகாரம் வர்த்தமானி திருத்தி கைத்தொழிலை கட்டியெழுப்ப செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதிக வட்டி கிடைக்கும் வகையில் வைப்புக்களில் பணத்தை முதலீடு செய்து அதிக வட்டி பெறப்பட்டுள்ளது. | |
| (இ) | 1996 ஒக்டோபர் 24 திகதிய இலக்கம் 946/9 கொண்ட அதி விஷேட வர்த்தமானி மூலம் திருத்திய 1971 இன் 47 இலக்க தேசிய திரைப்பட கூட்டுத்தாபன சட்டத்தின் 61 ஆம் மற்றும் 05 ஆம் பந்தியின் கீழான கட்டளைகளில் கட்டுப்பாட்டு சபை கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய முறை தொடர்பாக குறிப்பிடாமையினால் 2022 ஆண்டினுள் ஒரு கட்டுப்பாட்டு சபை கூட்டமொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் கடந்த ஆண்டுகளின் நிலைமையும் அவ்வாறே ஆகும். அதன் பிரகாரம், திரைப்பட கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந் நிதியம் நிறுவப்பட்டுள்ள போதும் கட்டுப்பாட்டு சபையினால் திரைப்பட கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தொடர்ச்சியான பங்களிப்பொன்று வழங்கப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | அமைச்சு மாற்றமடைந்தன் மீது கட்டுப்பாட்டு சபையை நியமித்தல் தாமதமடைந்ததன் காரணமாக கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக நடவடிக்கை எடுக்க முடியவில்லை எனினும் எதிர்காலத்தில் அந் நடவடிக்கைகளை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | கட்டுப்பாட்டு சபை கூட்டங்களை உரியவாறு நடாத்தி திருத்திய கட்டளைகள் பிரகாரம் கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறமையின்கை

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொரியாவின் சங் - எங்க் (CHUNG –ANG University) பல்கலைக்கழகத்தில் “PHD in Film & Multimedia – Film & Media Production” பட்டத்தை கற்பதற்காக குறைந்த பட்சம் ரூபா 51,916,665 தொகை செலவாகும் என திரைப்பட இயக்குனர் ஒருவரினால் செய்யப்பட்ட எழுத்துமூல கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு வேறு எந்த சான்றுகளும் இல்லாது 2022 மார்ச் 31 திகதிய கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில் கிடைத்த அங்கீகாரத்தின் மீது ரூபா 1,000,000 தொகையான நிதி அநுசரணை ஒன்றை வழங்கியிருந்ததுடன் அந்த தொகையை பல்கலைக்கழகத்திற்கு செலுத்தியதாக உறுதி செய்திருக்கவில்லை. மேலும், நிலையான கட்டளை இலக்கம் 4 (ஊ) பிரகாரம், கட்டுப்பாட்டு சபையினால் எவ்வித விதிமுறையை அல்லது நிபந்தனையை நிச்சயித்துக் கொள்ளாது இந்த நிதி மானியம் செய்யப்பட்டிருந்தது. | அவர் கூட்டுத்தாபனத்தின் டிப்ளோமாதாரர் ஒருவராக துறைக்கு உட்பட்டுள்ளதுடன் துறையில் இவ்வாறு பட்டப் பின்படிக்பை பெற்ற ஒருவர் இதற்கு முன்னர் இருக்கவில்லை எனவும் அந்த செலவாகும் செலவினம் தொடர்பாக கட்டுப்பாட்டு சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானமொன்றின் மீது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் துறையில் நிலைத்திருப்பார் என்ற எதிர்பார்ப்பில் இந்த புலமை பரிசில் வழங்கப்பட்டுள்ளது. அவர் அதனை கற்கும் துறையினர் என்பதாத பெறுபேற்று ஆவனமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவர் சர்வதேச பட்டம் பெற்ற இயக்குனர் ஒருவராக நன்மதிப்பை பெற்றுத் தந்துள்ளார். | நிதி மானியத்தை செய்யும் போது செலவிட்ட தொகையின் பிரதிபலனை துறைக்கு பெற்றுக் கொள்ளக் கூடியவாறு கட்டுப்பாட்டு சபையால் நிதியத்தின் கட்டளைகள் பிரகாரம், விதிமுறைகளை அல்லது நிபந்தனைகளை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். |

## 4 . கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 இன் இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதி சுற்றறிக்கையின் 15.1 மூலம் பிரசுரிக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2) (ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதங்களுக்குள் உறுதி செய்த நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், 2022 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 09 மாத தாமதத்தின் பின்னர் 2023 திசெம்பர் 07 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2022.12.31 திகதி இறுதிக் கணக்குகள் 2023 பெப்ரவரி மாதம் அளவில் தயாரித்திருந்த போதும் அமைச்சு மாற்றமடைந்ததன் மீது கட்டுப்பாட்டு சபை நியமனம் தாமதிப்பதன் காரணமாக இறுதிக் கணக்குகளிற்கு கட்டுப்பாட்டு சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளும் தாமதம் இதற்கு காரணமானது. | சுற்றறிக்கை பிரகாரம் உரிய திகதியில் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

### 4.2 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 (ஊ) பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் அல்லது கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உள்ளக கணக்காய்வு பணிகளை உரியவாறு செயற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான செயன்முறையொன்று உள்ளதாக உறுதி செய்ய வேண்டிய போதும் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆரம்பம் முதலே கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு சரியானது. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரகாரம் உள்ளக கணக்காய்வொன்று செய்யப்பட வேண்டும். |

### 4.3 வரவு செலவு திட்டக் கட்டப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 இலக்க அரச நிதி சுற்றிக்கையின் 15.1 ஊடாக பிரசுரிக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) (இ) மற்றும் (ஈ) பிரகாரம் ஏதேனும் நிதியமொன்றில் கட்டுப்பாட்டு அதிகாரத்தினால் வருடாந்தம் எதிர்வரும் ஆண்டின் பாதீட்டை அந் நிதியத்தின் நோக்கத்திற்கு இணங்க தயாரித்து குறித்த அமைச்சின் செயலாளரின் | அதற்காக தீர்மானம் எடுக்க கட்டுப்பாட்டு சபையை கூட்டிக் கொள்ள முடியாமல் போனதுடன் இறுதி கூட்டத்திற்காக நிதி வரவு செலவு திட்டமொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்ட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டவாறு நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய புதிய சட்ட கோவையொன்று தயாரிக்க | நிதியத்தின் நோக்கங்களிற்கு இணங்க வரவு செலவு திட்டத்தை தயாரிக்க வேண்டியதுடன் அங்கீகாரிக்கப்பட்ட வரவு செலவு திட்டமொன்று இல்லாது |

| | | |
|---|---|---|
| மற்றும் மதிப்பிற்குரிய அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு நடைமுறை ஆண்டில் செப்டெம்பர் 30 திகதிற்கு முன்னர் தேசிய வரவு செலவு திட்ட பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பி அதன் பிரதியொன்றை அரச நிதி பணிப்பாளரிற்கு அனுப்ப வேண்டிய போதும் நிதியத்தினால் 2022 ஆண்டிற்காக வரவு செலவு திட்டமொன்றை தயாரித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது நிதியத்தின் செலவுகளை மேற்கொண்டிருந்தது | வேண்டுமென முக்கியமாக வழியுறுத்தப்பட்டது. | செலவுகளை மேற்கொள்ளக் கூடாது. |